1972 மார்ச் 17]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1,528 பஞ்சாயத்துக்களில் அரிசனங்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

திரு. டி. கணபதி : தலைவர் அவர்களே, குறைந்த வாக்காளர்கள் உள்ள பஞ்சாயத்துக்களிலும் அரிசனங்களுக்கு இடம் ஒதுக்கப்படவில்லை. கூடுதலான வாக்காளர்கள் இருக்கும் இடங்களில் போட்டியிருப்பதால் அங்கேயும் அரிசனங்கள் தேர்ந்தெடுக்கப்பட முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருத்தி, எல்லா பஞ்சாயத்துக்களிலும் அரிசனங்களுக்கு ரிசர்வ் தொகுதி அமைத்துக்கொடுக்கும் வகையில் சட்டம் திருத்தியமைக்கப்படுமா? அல்லது பெண்களுக்கு இடம் ஒதுக்கப்படுவதைப் போன்று 'கோ-ஆப்ட்' முறையில் அரிசனங்களுக்கு இடம் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரிசனங்களும் இடம் பெறுவதற்கான முறையில் விதிமுறைகள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் 752 ஊராட்சிகளிலே அரிசனங்கள் தலைவர்களாக இருக்கிறார்கள். 1203 ஊராட்சிகளில் உப தலைவர்களாக அரிசனங்கள் இருக்கிறார்கள். 1528 ஊராட்சிகளிலே பாதிப்பேருக்குமேல், அரிசனங்கள், பழங்குடி மக்கள் ஆக இருப்பதால் அரிசனங்களுக்கு என்று தனியாக இடம் ஒதுக்க வேண்டியதில்லை என்ற கருத்தின் அடிப்படையில்தான் 1528 இடங்களில் தனியாக ஒதுக்கவில்லை.

Pay scales of Town-Planning Inspectors

* 532 *Q*.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that representations have been received from the Town Planning Inspectors of 90 Municipalities including Corporation of Madurai for revision of wages; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழ்நாடு நகரமைப்பு தொழில் நுட்ப உட்பிரிவு பணியாளர்களின் சங்கத்திடமிருந்தும் மற்றும் சில நகரசபைகளிலுள்ள நகர அமைப்பு சார்பு நிலை பணியாளர் தொகுதியிடமிருந்தும் சில பதவிகளுக்கு சம்பள விகிதங்களை திருத்தி அமைக்கக் கோரி முறையீடுகள் வந்துள்ளன.

(இ) இப்பொருள் அரசின் கவனத்திலுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, 90 நகரசபைகளிலும் சேர்ந்து 246 டவுன் பிளானிங் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 100 பேர் மாக்ஸிமம் ரீச் பண்ணிவிட்டார்கள். அவர்கள் சம்பந்தமாக பே கமிஷன் . . .

Is it not a fact that the Director of Town Planning has made some recommendations to the Secretary and the matter is pending with the Secretary for more than six months ?
என்று கூறியிருக்கிறது. ஆகவே உடனடியாக அரசு, டைரக்டர் ஆஃப் டவுன் பிளானிங் செய்த சிபாரிசை அமுல் நடத்த வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நகராட்சி இயக்குநர் ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரை அனுப்பியிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவிலே தக்க முடிவு எடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

Post-Graduate Diploma Course in Psychiatry

* 533 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce a Post-Graduate Diploma Course in Psychiatry in the Medical Colleges in Madras; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) சென்னை மருத்துவக் கல்லூரியில் ஏப்ரல் 1972-லிருந்து ஓராண்டு டிப்ளமோ படிப்பு, மனநிலை மருத்துவம் நடைபெறும். ஆண்டுக்கு ஆறு மாணவர்கள் வீதம் சேர்த்துக் கொண்டு துவக்கப்படும்.

திரு. என். கே. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, இந்தமாதிரியான மன நிலைநோய்பற்றி கற்றுத் தேறுவதற்கு அதிகமான நாள் பிடிக்கும் என்பதால் அதிகமான மாணவர்கள் சேர்ந்து படிக்க முன்வருவதில்லை. ஆகவே, அந்த மாணவர்களுக்கு அதிகப்படியான உபகாரச் சம்பளங்களைக் கொடுத்து, அதிக மான மாணவர்களைச் சேர்க்க வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு பிரச்சினை எழவில்லை. இப்போது மாணவர்கள் பலர் சேர முன்வருவதால் இடம் இல்லை என்று சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது.